வெண்ணிலாவைச் சுற்றி
விளையாடும் விண்மீன்களே-நீங்கள்
வருவீர்களா நிலத்தில்
விளையாடவே...

வீட்டில் யாரும் இல்லை
வீண் தொல்லை ஏதும் இல்லை
சேர்ந்து விளையாட இங்கு-வேறு
செல்லம் கூட இல்லை..


பாவாடை கட்டிக் கொண்டு
பாட்டுப் பாடி ஆடலாம்
பால் சோறும் உண்ணலாம்..

பாயாசமும் கட்டிக் கொண்டு
பால்நிலாவுக்கு கொடுக்கலாம்-நான்
பாடும் தமிழைக் கேட்டு-நீங்கள்
விண்ணில் எங்கும் தூவலாம்...

கவிஞர் ஆவூரான்.

கேசி தமிழ் மன்றம்

# இளவேனில்



## பார்வைக்கு ...

| | | |
|---|---|---|
| சஞ்சிகை | : | இளவேனில் |
| வகை | : | சிறுவர் தொகுப்பு |
| முதற்பதிப்பு | : | 22 தை 2012 |
| வெளியிடுவோர் | : | கேசி தமிழ் மன்றம் |
| தொடர்புகட்கு | : | கேசி தமிழ் மன்றம் |

PO Box 2516,
Fountain Gate,
Vic - 3805,
Australia

info@caseytamilmanram.org.au



## இளங் கீற்றுக்கள் ...

சாகித்தியா வேந்தன்

காவியன் பத்மசிறி

ஜபெனீஷ் யனாசுதன்

துவிஜன் பசுபதிதாசன்

சமுத்திரா பத்மசிறி

ஆருரன் மதியழகன்

சாருகா சிவசுதன்

ஆரபி மதியழகன்

ஹரிஜன் பசுபதிதாசன்

ஆரணன் மதியழகன்

நித்தியா பத்மசிறி

அக்.ஷயன் மணிவண்ணன்

அபிதாரணி சந்திரன்

விசாகன் பசுபதிதாசன்

துவாரகன் சந்திரன்

அஷ்வின் மணிவண்ணன்

திவ்வியா தேவபாலன்

காவியா வேந்தன்

யதுசன் ரமேஷ்

பாணு மகேன்

திவ்வியா மகேன்

# வாழ்த்துச் செய்தி

***கேசி தமிழ் மன்றத்திலிருந்து***
***“இளவேனில்”***
*எனும் ஒரு தமிழ் சஞ்சிகை*
*வெளிவருகிறது.*
*இச்சஞ்சிகையானது*
*மன்றத்தைச் சேர்ந்த*
*சிறுவர்களின் ஆக்கங்களை ஊக்குவிக்கவும்*
*அவர்களை வழிகாட்டும் மூத்தோர்களுக்கு*
*தமிழை வளர்க்கவும் வளம்பெறச்செய்யவும்*
*வேண்டிய உதவியை*
*இறைவன் அருளவேண்டுமென்று வேண்டி*
*எனது ஆசிகளைத் தெரிவிப்பதில்*
*மகிழ்ச்சியடைகிறேன்*


*வாழ்க தமிழ்! வளர்க கேசி தமிழ் மன்றம்!*

கலைவளன் *சிசு நாகேந்திரன்*
தை திங்கள் 2012





## பாணு மகேன்



வணக்கம்

கேசி தமிழ் மன்றத்தின் உறுப்பினராகிய நாம் எமது குழந்தைகளின் எழுத்து ஆற்றலை ஊக்குவிக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் கையெழுத்து சஞ்சிகை ஒன்றை ஆரம்பித்துள்ளோம். இந்த சஞ்சிகைக்கு "இளவேனில்" என்ற பெயரும் பொருத்தமாக அமைந்திருக்கிறது.

இந்த சஞ்சிகை வெளிவர தங்களின் ஆக்கங்களை தந்து உதவிய குழந்தைகள் அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

இது போன்று மேலும் உங்களின் ஆக்கங்கள் எதுவாக இருப்பினும், அதனை எமக்கு அனுப்பும்படி வேண்டிக்கொள்கிறோம்.

அனைவருக்கும் எமது தைத்திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறோம்.

நன்றி

தொகுப்பாளர்கள்.





## திவ்வியா மகேன்



## தலைவரின் உள்ளத்திலிருந்து...........

எம்மிடையே இலை மறை காயாய் மறைந்திருக்கும் படைப்பாற்றல் மிக்க சிறுவர்களுக்கும் பெரியோர்களுக்கும் களம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்கின்ற கேசி தமிழ் மன்றத்தின் பெருவிருப்பின் விளைவாய், எமது கன்னி முயற்சியான 'இளவேனில்' எனும் சஞ்சிகை, தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் கொண்டாட்ட நாளில் மலர்கின்றமை பெருமகிழ்ச்சியை அளிக்கின்றது.

இவ்விதழ், எமது சிறுவர்களின் ஆக்கங்களை முதன்மையாய் தாங்கி வருகின்றது. சிறுபிள்ளைகளின் உற்சாகமான பங்களிப்பு, புலம்பெயர்ந்து வாழும் தேசத்தில் தமிழை நேசிக்கும் இளைய தலைமுறையொன்றின் எழுச்சிக்கு சான்றாக அமைகின்றது. இந்த இளைய தலைமுறையால், புலம்பெயர் சமூகத்தில் தமிழ் வாழும் - தமிழ் ஆக்க முயற்சிகள் மேலும் மெருகுறும் எனும் நம்பிக்கை ஏற்படுகின்றது. இந்தப் பரிசோதனை முயற்சியை ஒருங்கிணைத்த ஆவுரான் சந்திரன் அவர்களும் பங்களித்த சிறுவர்களும் மிகவும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

'இளவேனில்' தொடர்ந்து காலாண்டுச் சஞ்சிகையாய் மலர வேண்டும் - எல்லாத் தலைமுறைகளையும் சேர்ந்த படைப்பாளிகளின் ஆக்கங்களால் அலங்கரிக்கப்படவேண்டும் - அச்சிலும் இணையத்திலும் தமிழர்களுக்கு விருந்தாக அமைய வேண்டும் என்பது எமது எண்ணம். அதன் சாத்தியப்பாடு எமது வளத்திலும், உங்களின் மற்றும் தமிழ்ப் படைப்பாளிகளின் பங்களிப்பிலும் தான் தங்கி இருக்கின்றது. உங்களின் தொடர்ந்த ஆதரவு - சமூகத்திற்கு பங்களிக்கவேண்டும் எனும் சேவை உணர்வு என்பவற்றால், இப்பரிசோதனை முயற்சி நிரந்தர முயற்சியாய் மாறி, வரும் காலமெல்லாம் 'இளவேனில்' களிப்புத் தரும் எனும் நம்பிக்கையோடு விடைபெறுகின்றேன்.

நன்றி
கு.சிவசுதன் ( தலைவர் - கேசி தமிழ் மன்றம்)






## யதுசன் ரமேஷ்



## சாகித்தியா வேந்தன்








## காவியா வேந்தன்

### அதுவா? இதுவா?

ஒரு நாள், என் அப்பாவின் நண்பர் வீட்டுக்கு வந்தார். அவரின் மகனின் பெயர் லட்டு, எனக்கு விளையாட்டுகள் சொல்லித்தந்தார். லட்டுவுடன் விளையாடும் போது நான் "லட்டு" என்று கூப்பிட்டேன். உடனே, அம்மா சொன்னவ "லட்டுவை லட்டு அண்ணா என்று கூப்பிட வேணும்." என்று. "பெரியவர்களை அண்ணா, அக்கா, மாமா, மாமி என்று கூப்பிட வேணும்" என்று அப்பா சொன்னவர்.

பிறகு ஒரு நாள் நாங்கள் கடற்கரைக்கு சென்றோம். அங்கே அம்மாட தோழியை நான் "Aunty" என்று கூப்பிட்டேன். அவ சொன்னவ "Don't call me Aunty, Call me Reka I am not that old" என்று. நான் அம்மாவை பார்த்தேன். அம்மாவுக்கு என்ன செய்றது என்று தெரியவில்லை. எமது கலாச்சாரம் இப்போ அதுவா? இதுவா?

காவியா வேந்தன்

## துவிஜன் பசுபதிதாசன்

எனது முதல் பாசறை ( Camp)

நான் நான்காம் வகுப்பில் படிக்கும் போது முதல் பாசறை வந்தது. அதற்கு நானும் சக மாணவர்களும் வகுப்பு அசிரியர்களும் Phillip Islandக்கு போனோம். அங்கு மூன்று நாட்கள் தங்கினோம். வீட்டில் அம்மா அப்பா சகோதரர்களை விட்டு தனியே இருப்பது இது தான் முதல் அனுபவம். அதனால் சக நண்பர்கள் வீட்டை பிரிந்த கவலையில் அழுது கொண்டு இருந்தார்கள். அங்கு மாலை நேரத்தில் penguin parade பார்த்தோம். அது மிகவும் அழகாக இருந்தது. மேலும் சில activities செய்தோம். அதில் நான் அறிந்து கொண்ட விடயம் பாசறைக்கு போகிற காரணம் நமது வேலைகளை நாமே செய்வதற்காகவும், ஒற்றுமையாகவும், பகிர்ந்து செயற்படவும், விட்டுக் கொடுத்து செயற்படவும் போன்ற பல நல்ல பழக்கவழக்கங்களை பழகுவதற்கு உதவியாக இருக்கும் என்பதற்காக பாசறைக்கு போவார்கள். எனக்கு அது முதல் அனுபவம் என்ற படியால் அது ஒரு மறக்க முடியாத அனுபவம்

துவிஜன் பசுபதிதாசன்






## திவ்வியா தேவபாலன்



## ஜபெனீஷ் யனாசுதன்








## அஷ்வின் மணிவண்ணன்



## காவியன் பத்மசிறி

### நலமாக வாழ்வோம்

நலமாக வாழ்வதற்கு என்ன செய்யலாம்? முதலாவதாக நாங்கள் சுத்தமாக இருக்க வேண்டும், உண்ண முதல் கை கழுவ வேண்டும். காலையிலும் மாலையிலும் பல் துலக்கி குளிக்க வேண்டும்.

நல்ல சத்துள்ள உணவுகளை உண்ண வேண்டும். பழங்கள், மரக்கறிகள், மீன், பால், முட்டை சாப்பிடலாம். இறைச்சி, கொழுப்பு வகை உள்ள உணவுகளை குறைவாக சாப்பிடுவது நல்லது. இனிப்புகளை அளவோடு உண்ண வேண்டும். ஒரு நாளில் 8 கோப்பை நீர் குடிக்க வேண்டும்.

மனிதனுக்கு உடற்பயிற்சி தேவை. ஒவ்வொரு நாளும் கொஞ்சத் தூரம் நடக்க வேண்டும். அல்லது ஓடி விளையாட வேண்டும். தொலைகாட்சி பார்த்து நேரத்தை வீணாக்காமல், கண்ணையும் பழுதாக்காது விளையாடுவது நல்லது. குறைந்தது எட்டு மணித்தியாலம் நித்திரை கொள்ள வேண்டும்.


இப்படி வாழ்ந்தால் நலமாக வாழலாம்.

காவியன்





## துவாரகன் சந்திரன்



### நான் பெற்ற தங்க பரிசு

நான் சிறு வயதிலிருந்து தமிழ் ஊக்குவிப்பு போட்டிக்கு சென்று இருக்கிறேன், எப்போது. முதலிடம் பெற வேண்டும் என்று யோசிப்பேன் ஆனால் விக்ரோரிய மாநிலத்தில் 1,2,3 இடத்தில் தெரிவு செய்யப்படுவேன்

இந்த முறை தான் நான் தேசிய நிலையில் எழுத்திலும், பேச்சிலும் முதலிடம் பெற்றேன்.

Sydneyயில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் நான் பேச்சை பேசிக் காட்டினேன். இது எனக்கு மிகவும் பெருமை. எனது அம்மா அப்பாவுக்கும் பெருமை.

ச. துவாரகன்




## சமுத்திரா பத்மசிறி








## விசாகன் பசுபதிதாசன்



இது சிவா விஷ்ணு ஆலயம்.

மெல்போன் மானிலத்து கரம்டவுன் நகரத்தில் அமைந்துள்ளது. இந்தக் கோயிலுக்குத்தான் நாங்கள் சென்று வழிபடுவோம்.

விசாகன் பசுபதிதாசன்

# ஆருரன் மதியழகன்

ர ரு

ஆருரன் ரு

ரு

என்று ஒரு
சுப்பகிரோ
இருந்தார்.
அவர் கெட்டவர்கள்
இருந்து உலகத்தை
காப்பாற்றுவார்.
எல்லோரும் அவரை
விரும்பம், அவர்தான்
உலகத்தில் திறம்





# அபிதாரணி சந்திரன்

முயல்

முயல் என் செல்லப்பிராணி,
அது கரட் சாப்பிடும்.
அது என்னோடு துள்ளித்துள்ளி விளையாடும்.
அதுக்கு பட்டுப்போல மேனி, பஞ்சு போன்ற
கால்கள், பளபளக்கும் கண்கள்.
முயல் மண்ணைத்தோண்டி அதுக்குள்
படுக்கும். அது நாயைக் கண்டால் முயல்
ஓடி விடும். அது ஆபத்தில் இருந்தால்
நான் போய் காப்பாற்றுவேன்.



## சாருகா சிவசுதன்







## அக்.ஷயன் மணிவண்ணன்

நான்

எனது பெயர் அக்ஷையன்.
நான் இரண்டாம் வகுப்பு படிக்கிறேன்.
எனக்கு ஏழு வயது.
எனக்கு இரண்டு தம்பிகள்.
எனது வீட்டில அப்பா,அம்மா,
அம்மம்மாவும் இரண்டு தம்பியும்
இருக்கிறார்கள்.
அவர்களின் பெயர் அஷ்வின் அபிஷையன்.
எனக்கு கிரக்கெட் வெளையாட்டில்
விருப்பம்.
நான் பாரதிப்பள்ளியில் தமிழ்
படிக்கின்றேன்.

ம.அக்ஷையன்


## நித்தியா பத்மசிறி

### கீசாவின் பெரிய பிரமிட்

கீசாவின் பெரிய பிரமிட் எகிப்து நாட்டில் கீசா என்ற இடத்தில் இருக்கிறது. இது ஒரு பழய உலக அதிசயங்களில் ஒன்றாகும். இது மட்டுமே பழய உலக அதிசயங்களில் இந்த நாள் வரை நிற்கிறது.

இந்தப் பிரமிட் பாரோ (Pharaoh) குபுவிற்கு கட்டப்பட்டது. இது குபுவின் சமாதியாகும். இது சுண்ணக்கல், பசோல்ட் (Basalt), கருங்கல் போன்ற கற்களால் கட்டப்பட்டது.

இந்த பிரமிட் கிமு 2570வில் கட்டி முடிக்கப்பட்டது. இது 137 மீட்டர்கள் உயரம் மற்றும் 235 மிட்டர்கள் அகலம் கொண்டது. இந்த பிரமிட் 4000 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. இதை சாதாரன மனிதர்கள் கட்டினார்கள் என்பதை நம்ப முடியவில்லை. இந்த பிரமிட் தான் எகிப்தின் மிக பிரமாண்டமான பிரமிட்.



நித்தியா
பத்மசிறி






## ஆரணன் மதியழகன்

10/12/11

[illegible] பல்

ஆரணன்




## ஹரிஜன் பசுபதிதாசன்








## ஆரபி மதியழகன்



26/11/2012

நேற்று பள்ளியிலிருந்து வரும் போது என் அம்மா சொன்னவ December 10 நாங்கள் இலங்கைக்கு போகின்றோம். நான் மிகவும் சந்தோசமாக இருந்தேன். உடனே என் உடுப்புகளை பார்த்து எந்த உடைகளை கொண்டு போகலாம் என்று பார்த்தேன். இலங்கைக்கு போவதற்கு எனக்கு பொறுக்கேலாது

ஆரபி மதியழகன்